Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 19, 2022

செவ்வாய்க்கிழமை 20, செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 103 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



உலகத் தலைவர்களின் அஞ்சலிக்கு மத்தியில்

# விடை பெற்றார் மகாராணி

ஐக்கிய இராச்சியத்தை மிக நீண்ட காலம் (70 வருடங்கள்) ஆட்சி செய்தவர் என்ற பெருமைக்கு உரிய, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு, பூரண அரச மரியாதையுடன் இலண்டன் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில், நேற்று (19) பிற்பகல் இடம்பெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட 500 மேற்பட்ட வெளிநாட்டுத் தலைவர்களும் வெளிநாடுகளின் முக்கிய பிரதிநிதிகளும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டதுடன், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மகாராணியில் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார்.

தனது பாரியார் மைத்ரீ விக்கிரமசிங்க மற்றும் இலங்கைத் தூதுவருடன் மகாராணிக்கு ஞாயிற்றுக்கிழமை (18) இரவு வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் வைத்து, ஜனாதிபதி ரணில், இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தார்.

தொடர்ச்சி P2

## பூரணை தினத்தில் இருள் சூழும்

மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்வரும் வப் போயா (பூரணை) தினத்தன்று அனைத்து விகாரைகளிலும் மின்விளக்குகளை அணைக்குமாறு மத்திய மாகாண மகா சங்க சபையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண மகாசங்க சபை கூட்டம் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற போது, பிக்குகள் குழுவொன்றினால இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





5ஆம் நாள் நினைவேந்தல் யாழ். பல்கலையில்

## உணர்வுபூர்வமாக முன்னெடுப்பு

**வி.நிதர்ஷன்**

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்ச்சியாக ஐந்தாவது நாளும், யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபனின் பிரதான நினைவாலயத்தில், நேற்று (19) காலை உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுப்பேன்



சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த போது இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைத்து இளைஞர்களையும் விரைவில் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## இலங்கை மாணவர்கள் விவகாரம் சூடுபிடிக்கிறது

**ரஷ்ய – உக்ரேன் ஊடகங்களிடையே பனிப்போர்**

உக்ரைனின் கார்கிவ் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் 07 இலங்கை மாணவர்களின் நிழற்படங்களை உக்ரைன் ஊடகவியலாளர் ஒருவர் தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டதைத் தொடர்ந்து, ரஷ்ய மற்றும் உக்ரைன் ஊடகங்களுக்கு இடையே பனிப்போர் ஆரம்பித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2




குருந்தூர் மலை

## நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நாளை மாபெரும் போராட்டம்

**தமிழ் உள்ளங்களுக்கு அழைப்பு**

**செ.கீதாஞ்சன்**

முல்லைத்தீவு - குருந்தூர் மலை, தண்ணிமுறிப்பு பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ் நிலங்களான 632 ஏக்கர் காணிகள், தொல்பொருள் திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்டு, நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமையை எதிர்த்து, நாளை (21) மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்பு கிராம அமைப்பின் தலைவர்கள், முல்லைத்தீவு மாவட்ட ஊடக அமையத்தில் நேற்று (19) நடத்திய ஊடகவியளாலர் சந்திப்பின் போதே, அவர்கள் மேற்படி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

தொடர்ச்சி P2

## கோட்டாபய இனிமேல் அரசியலுக்கு வரமாட்டார்

**உண்மையான தலைவர்களுக்கு மக்கள் இடம் வழங்குவதில்லை**



கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து நீக்க முன்வந்த, போராடிய சகலரும் தாம் இறுதி மூச்சை விட முன்னரேனும் அதற்காக வருத்தப்படுவார்கள். அவரை போன்ற ஒரு அரச தலைவரை வரலாற்றிலும், இனியும் தேடிப்பிடிக்க முடியாது. துரதிஷ்டவசமாக மக்கள் உண்மையான தலைவர்களுக்கு இடம் வழங்குவதில்லை. அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டார், இனிமேல் அவர் அரசியலுக்கு வரமாட்டார் என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு புதிய நன்கொடை திட்டம்



சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் இலங்கையின் வெற்றிகள் தற்போதைய நெருக்கடியால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. ஆகவே இலங்கையின் உணவு மற்றும் மருத்துவ பொருட்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலங்கையின் நண்பர்கள் தமது ஒற்றுமையைக் காட்டவேண்டியுள்ளது என ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நேர மாற்றம்



தெற்காசியாவில் உயர்ந்த கோபுரமான 'கொழும்பு தாமரை கோபுரம்' செப்டெம்பர் 15ஆம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டது. அதனை பார்வையிட வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் பார்வையிடும்

தொடர்ச்சி P2

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலினால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீடாக

## 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை கோரலாம்




எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலினால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் தொடர்பில்

தொடர்ச்சி P2

சுற்றாடல் மேம்பாட்டுக்கு

## நிதியுதவி வழங்க தென்கொரியா இணக்கம்

**ஏ.எச்.ஏ. ஹூஸைன், ஆர்.ஜெயஸ்ரீராம்**



சுற்றாடல் துறையுடன் சம்பந்தப்பட்ட சுற்றாடல் மேம்பாடு, கனிய மணல் அகழ்வு போன்றவற்றில் புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு தென் கொரியா நிதியுதவி வழங்க முன்வந்திருப்பதாக சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கையெழுத்து வேட்டை தொடர்கிறது



பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்றும் (19) முன்னெடுக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை அனுராதபுரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# இலங்கை மாணவர்கள் விவகாரம் சூடுபிடிக்கிறது

20 முதல் 40 வயதுக்குட்பட்ட இந்த ஏழு மாணவர்களில் 6 ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவதாகவும் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு உக்ரைனுக்கு வந்தவர்கள் என்றும் உக்ரைன் ஊடகவியலாளர் மரியா ரோமானென்கோ தனது டுவிட்டரில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உக்ரைனின் குப்யன்ஸ்க் பிரதேசத்துக்குச் சென்ற 3 வாரங்களில், குப்பியன்ஸிலிருந்து கார்கிவ் நோக்கி செல்ல முயன்ற போது இவர்கள் ரஷ்ய படைகளிடம் சிக்கி, அவர்களிடம் சம்பளம் வழங்காமல் ரஷ்ய படைகள் வேலை வாங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தை ரஷ்யாவின் இராணுவ சிவிலிய ஆட்சிக்கு எதிராகத் தூண்டும் முயற்சி என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக இராணுவ சிவிலியன் ஆட்சியின் தலைவர் விட்டலி கஞ்சேவ்வை மேற்கோள் காட்டி ரஷ்ய ஊடகமான டாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை மாணவர்களை உக்ரைனிய சிறப்புப் படைகள் தடுத்து வைத்ததாகவும் போரில் வெற்றி பெற உக்ரைன் மக்களின் உயிரைப் பணயம் வைத்து வருவதாகவும் விட்டலி குற்றம் சுமத்தியுள்ளார்.
7 இலங்கை மாணவர்களையும் ரஷ்யப் படைகள் தடுத்து வைத்துள்ளதாக உக்ரனிய ஊடகங்கள் குற்றம் சுமத்துகின்ற போதும், உக்ரைனிய பாதுகாப்புப் படையினர் மீது ரஷ்ய ஊடகங்கள் குற்றம் சுமத்தி வருகின்றன.

எனினும், இது குறித்து இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் உக்ரைனிய அரசாங்கத்திடம் வினவப்பட்டிருந்த உறுதிப்படுத்தல்களுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை என்று அறியமுடிகிறது.



உலகத் தலைவர்களின் அஞ்சலிக்கு மத்தியில்

# விடை பெற்றார் மகாராணி

கடந்த செப்டம்பர் 8 ஆம் திகதியன்று, தனது 96 வயதில் பால்மோரலில் காலமான மகாராணியின் பூதவுடல், கடந்த புதன்கிழமை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நாள் முதல், 10 மணிநேரத்துக்கும் மேல் காத்திருந்து, ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையிலிருந்து நேற்றையதினம் (19), வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்கு படைகள் புடைசூழ ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட மகாராணியின் பூதவுடல் தாங்கிய பேழைக்கு, புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் வைத்து ஆராதனைகள் நடத்தப்பட்டன.

குடும்பத்தினர் மட்டும் பங்கு பெறும் ஒரு ஜெபத்துக்குப் பிறகு, புனித ஜார்ஜ் தேவாலயத்துக்குள் இடம் பெற்றுள்ள ஆறாம் ஜார்ஜ் நினைவு தேவாலயத்தில் தனது கணவர் எடின்பரோ கோமகனுடன் ராணி ஒன்றாகப் புதைக்கப்படுவார்.

பிறகு ராணியின் உடல் ராயல் வால்ட்டில் இறக்கப்படும். ராணியின் பைப்பர் இசைப்பார். பிறகு, 'தேவனே அரசனை காப்பாற்று' என்ற கீதம் பாடப்படும். விண்ட்சர் கோட்டையில் பைப்பர் கீதம் இசைக்கவேண்டும் என்பது ராணியே தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்ட கோரிக்கை என்று பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரது கல்லறையின் மேலே பதிப்பிக்கப்படும் கல்லில் 'ELIZABETH II 1926-2022' என்று பொறிக்கப்படும்.

# பூரணை தினத்தில் இருள் சூழும்

விகாரைகளுக்கான மின் கட்டணங்கள் ஐந்து முதல் ஆறு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், தனது விகாரைக்கான கட்டணம் 60,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கலஹா சிறிசாந்த தேரர் சுட்டிக்காட்டினார்.

பூஜைகள் நடைபெறவுள்ள நிலையில், மத வழிபாட்டுத் தலங்களுக்கு இவ்வாறு அதிக வரி விதிப்பது கவலைக்குரியது என்று குற்றம் சுமத்திய அவர், இந்த விடயத்துக்கு எதிராக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.



# உணர்வுபூர்வமாக முன்னெடுப்பு

யாழ். பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபம் திலீபனின் நினைவுப் படத்துக்கு ஈகைச்சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தி, ஒரு நிமிட அகவணக்கமும் மாணவர்களால் செலுத்தப்பட்டது.

# விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுப்பேன்

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த போது இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களின் உறவினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீன்பிடித் தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாத காரணத்தினால் அவர்கள் இவ்வாறு வெளிநாடு செல்ல முயற்சித்ததாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களும் தற்போது பெங்களூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறு இருப்பினும், எந்த காரணத்தை கூறியும் சட்டவிரோதமாக வேறு நாடுகளுக்கு எவரும் செல்வதை ஒருபோதும் ஏற்க முடியாதென சுட்டிக்காட்டிய அமைச்சர், நட்புறவை பயன்படுத்தி கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நாளை மாபெரும் போராட்டம்

குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.மயூரன், தண்ணிமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கலைச்செல்வன் மற்றும் தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்புத் தலைவர் ச.சசிகுமார் ஆகியோர் கூட்டாக இந்த ஊடக சந்திப்பை நடத்தினர்.

சங்கத் தலைவர் இ.மயூரன் கருத்துரைக்கையில், "1953ஆம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கவின் காலத்தில் புனரமைக்கப்பட்ட தண்ணிமுறிப்பு குளம் மற்றுமு அதன் கீழான நெற்செய்கை காணிகள் ஆக்கிரமிப்பாளர்களின் தூர நேக்கு சிந்தனை காரணமாக இன்றுவரை வனவளத் திணைக்களத்தின் எல்லை பகுதிக்குட்பட்டதாக இருக்கின்றது.

.

"இதன் அடுத்த கட்டமாக 1932ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களத்தால் நில அளவை செய்யப்பட்ட வரைபடத்தில் குருந்தூர் மலை தொல்லியல் இடம் என்ற பெயரில்தான் வரைபடம் ஆக்கப்பட்டுள்ளது.

"ஆனால், அந்த பதிவுகள் ஆவணங்கள் எல்லாம் திரிவு படுத்தப்பட்டு, குருந்தூர் விகாரை தொல்லியல் இடம் என்ற பெயரில் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

"எந்தெந்த இடங்களில் சிங்கள குடியேற்றங்கள், தமிழர் பகுதிகளில் நிறுவப்பட்டதோ, அத்தனை இடத்திலும் முன்னர் ஒரு பௌத்த துறவியும் ஆட்களும் வருவார்கள். அதன் பின்னால் தொல்லியல் திணைக்களம் வரும் இருவரும் சேர்ந்து பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வார்கள். அதன் பின்னர் அங்கு சிங்கள குடியேற்றம் நிறுவப்படும்.

"ஒரு தொல்லியல் சான்றுப் பொருட்கள் உள்ள பகுதியை தொல்லியல் இடமாக ஆக்கிக்கொள்வதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனால், அதனை பௌத்த தொல்லியல் இடமாகவோ அல்லது பௌத்தர்களுக்குரிய இடமாக மாற்றிக்கொள்வதில் எங்களுக்கு கருத்து ஒருமைப்பாடு இல்லை.

"நாட்டில் அரிசி இல்லை, மா இல்லை, கஞ்சி குடிக்கும் நிலையில் நாங்கள் இருக்கும் போது, நாங்கள் பாரம்பரியமாக வயல் செய்த 632 ஏக்கர் நிலத்தில் அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது?

"காவி உடை தரித்த தேரரால் மாவட்ட நீதிமன்ற கட்டளையை புறம்தள்ளி, இராணுவத்தை வைத்து தொடர்ச்சியாக கட்டுமானங்களை மேற்கொள்ளமுடியும் என்றால், இலங்கையில் நீதி எங்கே இருக்கின்றது?

"சர்வதேச ரீதியில் பணம் பெறுவதற்காக பொய்களை சொல்லி திரிகின்றார்கள். அதனை சர்வதேச நாடுகளும் வேடிக்கை பார்க்கின்றன என்றார்.

# கோட்டாபய இனிமேல் அரசியலுக்கு வரமாட்டார்

இலங்கையில் இன்று எரிவாயுவும், எரிபொருளும் மட்டுமே இல்லை, ஏனைய அனைத்தையும் இந்த நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ள முடியும். ஆனால் இவற்றை உற்பத்தி செய்யாது, சகல பொருட்களையும் வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள நினைத்ததன் விளைவாகவும், கடன்களை பெற்று நுகர்வுப்பொருட்களை இறக்குமதி செய்த காரணத்தினாலுமே மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் நாம் தள்ளப்பட்டோம். எனினும் இன்று நாடு வழமைக்கு திரும்பிக்கொண்டுள்ளது. தட்டுப்பாடுகள் இல்லாது மக்களுக்கு பொருட்கள் கிடைக்கின்ற நிலைமை உருவாகியுள்ளது. அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பிரச்சினைகள் முழுமையாக தீரும் என நம்புகின்றோம்.

அதுமட்டுமல்ல, கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து நீக்க முன்வந்த, போராடிய சகலரும் தாம் இறுதி மூச்சை விட முன்னரேனும் அதற்காக வருத்தப்படுவார்கள். அவரை போன்ற ஒரு அரச தலைவரை வரலாற்றிலும், இனியும் தேடிப்பிடிக்க முடியாது. ஊழல் செய்யாத ஒரு அரசு தலைவரே கோட்டாபய ராஜபக் ஷவேயாகும். அவர் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு பாதாள உலக கோஷ்டியேனும் தலைதூக்கவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக எந்தவித தாக்குதல்களும் நடத்தவில்லை. மக்கள் உண்மையான தலைவர்களுக்கு இடம் வழங்குவதில்லை என்பது துரதிஸ்டவசமாகும். இனியும் இதனை கதைத்து அர்த்தமில்லை. அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டார், இனிமேல் அவர் அரசியலுக்கு வரமாட்டார் எனவும் மஹிந்தானந்த தெரிவித்தார்.

# 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை கோரலாம்

பரிசீலிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் ஆலோசனை வழங்கியுள்ளார். இந்நிலையில், கடந்த ஆண்டில், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் மூழ்கியதால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக்கான இழப்பீடு எதையும் இலங்கை இன்னும் பெறவில்லை, எனினும் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீடாக 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை கோரலாம் என இலங்கை சூழல் பாதுகாப்பு மத்திய அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலால் ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கை குறித்து முழுமையான விசாரணை நடத்த எதிர்பார்ப்பதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். கப்பலின் சேதங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இதனை தெரிவிப்பதாக கணக்காய்வாளர் நாயகம் சூலந்த விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் இலங்கைக் கடலில் மூழ்கி ஒரு வருடமும் 3 மாதங்களுக்கும் மேலாகிறநிலையில், குறித்த கப்பலில் ஆபத்து மிக்க பொருட்கள் அடங்கிய 81 கொள்கலன்கள் காணப்பட்டதுடன், 25 தொன் நைட்ரிக் அமிலமும் அடங்கியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு புதிய நன்கொடை திட்டம்

சர்வதேச நிறுவனங்கள் நிபுணத்துவம் மற்றும் வளங்களை ஒன்றிணைத்து இலங்கைக்கு அதன் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உதவுவது இன்றியமையாததாகும். அதற்கமைய ஆசிய, உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியன ஒன்றிணைந்து உணவுப் பாதுகாப்பின்மையை எவ்வாறு தணிப்பது மற்றும் யாரும் பின்தங்கியிருக்கக் கூடாது என்பதை உறுதிசெய்வது பற்றி கலந்துரையாடிவத்தில் பெருமைப்படுகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவும் நோக்கில், நன்கொடைத் திட்டம் ஒன்றை, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்துள்ளது. நன்கொடை வழங்க விரும்புவோர், w undp.org/srilanka/donate என்ற இணையத்தளத்துக்கு பிரவேசித்து, நன்கொடையை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேர மாற்றம்

நேரங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என தாமரைக் கோபுரத்தின் தனியார் நிறுவன பிரதான நிர்வாக அதிகாரியான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அதனடிப்படையில், வாரநாட்களில் பகல் 12 மணிமுதல் இரவு 10 மணிவரையிலும் வாராந்த நாட்களில் காலை 10 மணிமுதல் இரவு 11 மணிவரையிலும் 'கொழும்பு தாமரை கோபுரம்' திறந்திருக்கும் என்றார்.

கொழும்பு தாமரை கோபுரத்தை பார்வையிடுவதற்கு நாடளாவிய ரீதியில் பெருந்திரளான மக்கள் வருகைதந்து கொண்டிருப்பதால், இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

# நிதியுதவி வழங்க தென்கொரியா இணக்கம்

ென்கொரியாவில் நடைபெற்ற சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான உபாயங்கள் பற்றிய மாநாட்டில் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்துகொண்டு, அந்நாட்டின் பிரதி சுற்றாடல் அமைச்சர் யோ ஜேசுல் உடன் இலங்கையில் சுற்றாடல் துறைக்கு உதவி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும், இத்துறைக்கு ஒத்துழைத்து நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதானிகளையும் அமைச்சர் நஸீர் அஹமட் இதன்போது சந்தித்தார்.

சுற்றாடல், காலநிலை மாற்றம் மற்றும் இதர திட்டங்களை இலங்கையில் ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் நிதியுதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், முகவர் நிறுவனங்களுடன் அமைச்சர் நஸீர் அஹமட், அங்கு நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் சுற்றாடலுடன் தொடர்புடைய திட்டங்களை நிறைவேற்ற பெருமளவான நிதியுதவிகள் கிடைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கையெழுத்து..

பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஐ.நா கூட்டத்தொடர்

# இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும்



ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இதற்கு முன்னரும் இலங்கைக்கு எதிராக பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் இம்முறை முக்கியமானதாகும். இம்முறை பிரேரணை அதிக பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான நிபந்தனைகளாக மாறிவிடும் அபாயம் உள்ளது என பிவித்துரு ஹெல உறும்யவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்று (19) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவற்றை தெரிவித்தார்.

2021 இல் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக 22 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் பதிவாகின. 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அன்று வாக்களித்த நாடுகளில் 2/3 நாடுகள் இன்னும் பேரவையில் உள்ளன. மேலும், இந்தியா, ஆர்ஜன்டீனா , எரித்திரியா மற்றும் சோமாலியா ஆகியவை இந்த ஆண்டு உறுப்பினர்களை இழந்தன, ஆனால் அவை மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன.

எங்கள் கணிப்பின்படி, இம்முறை பிரேரணைக்கு ஆதரவாக 24 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைக்கும். 12 நாடுகள் வாக்களிப்பதில் இருந்து விலகி இருக்க வாய்ப்புள்ளது. இந்த பிரேரணையில் உள்ள ஆபத்து என்னவென்றால், இந்த பிரேரணையின் உள்ளடக்கங்களை இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான நிபந்தனைகளாக மாற்றும் அபாயம் உள்ளது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள தற்போதைய நிலையில் பிரிவினைவாதிகள் தமது இலக்குகளை அடைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக செயற்படும் அபாயம் பலமாக உள்ளத எனவும் அவர் தெரிவித்தார்.



## அரைக்கம்பத்தில் பறந்த கொடிகள்

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு , பூரண அரச மரியாதையுடன் இலண்டன் வெஸ்ட்மினிஸ்டர் அபேயில், நேற்று (19) இடம்பெற்றது. இந்நிலையில் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக ஜனாதிபதி செயலக வளாகத்தில் இலங்கை கொடியும், பிரித்தானிய கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன .

## வைத்தியசாலைகளில் குவியும் குப்பைகள்

### மக்களுக்கு பாதிப்பு

வைத்தியசாலைகளில் இருந்து தொற்றும் கழிவுகளை அகற்றும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாமையால், கொடிய நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக, நாட்டின் சுகாதார ஊழியர்களின் முன்னணி சங்கம் எச்சரித்துள்ளது. “தொற்றுக் கழிவுகள் குவிந்து, அந்த கழிவுகளை முறையாக அகற்றாததால், ஒட்டுண்ணி தொற்று, நுரையீரல் தொற்று, பக்டீரியா மூளைக்காய்ச்சல், எச்.ஐ.வி, ஹெபடைடிஸ் பி, ஹெபடைடிஸ் சி, பூஞ்சை தொற்று மற்றும் பக்டீரியா (இரத்த ஓட்டத்தில் பக்டீரியா) உள்ளிட்ட தேவையற்ற பிரச்சினைகளுக்க முகங்கொடுக்க நேரிடலாம்."நோயாளர்களிடமிருந்து தொற்றுக்குள்ளான கழிவுகளை அகற்றும் பணி தனியார் துறை நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு கிலோகிராம் தொற்று கழிவுகளை அகற்றுவதற்கு 100 ரூபாய் பணம் போதாது எனவும் சுகாதார நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. தீர்வு வழங்கப்படாததாலும், கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் முற்றாக தனியார் மயமாக்கப்பட்டதாலும், கழிவுகளை குவிப்பதைத் தவிர மாற்று வழியையும் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.





50ஆவது நாளில்

## வடக்கு, கிழக்கில் பட்டங்கள் பறந்தன




■ கனகராசா சரவணன், ஆர்.ஜெயஸ்ரீராம்

“வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 50ஆவது நாள் நேற்றாகும்.

அதையொட்டி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களில் நேற்றையதினம் (19) பட்டங்கள் பறக்கவிடப்பட்டு, கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு - கல்லடி கடற்கரையில் ஒழுங்கு செய்யப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு, பல கோரிக்கையடங்கிய வாசகங்கள் கொண்ட பட்டங்களை பறக்கவிட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், “நடமாடுவது எங்கள் சுதந்திரம்”, “ஒன்றுகூடுவது எங்கள் சுதந்திரம்”, “பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை”, “வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்”, “சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டை தடுக்காதே”, “அரசியல் கைதிகளை விடுதலை செய்” மற்றும் “எங்கள் நிலம் எமக்கு வேண்டும்” போன்ற கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கை வாசகங்கள் எழுதப்பட்ட பட்டங்கள் பேரணியாக கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பறக்கவிடப்பட்டன.

இதில் சிவில் அமைப்புக்கள், இளைஞர் - யுவதிகள் மற்றும் பிரதேச மக்கள் கலந்துகொண்டனர். வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் நெறிப்படுத்துநர் கண்டுமணி லவகுசராசா தலைமையில், வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் சுழற்சி முறையில் 100 நாட்கள் செயல் முனைவு போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## பாலர் பாடசாலை கட்டிடத்திறப்பு விழா



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில், வவுனியா, பாவற்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை கட்டிடத்திறப்பு விழா நேற்று முன்தினம் (18) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டதுடன், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பிலும் பங்கேற்றிருந்தார்.



## தங்களுடைய தந்தையை கவனிக்க ரூ.2 இலட்சம் கேட்கும் 7 மகள்கள்

தங்களுடைய தந்தையை கவனித்துக்கொள்ள வேண்டுமாயின் மாதமொன்றுக்கு 2 இலட்சம் ரூபாயை, தருமாறு அவருடைய ஏழு மகள்களும் கோரியுள்ள சம்பவம் பாதுக்க பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தன்னுடைய ஏழு மகள்மார்களில் ஒருவர் கூட தன்னை கவனித்துக்கொள்வதில்லை என்றும் அவ்வாறு கவனித்துக் கொள்ளவேண்டுமாயின் மாதம் 2 இலட்சம் தருமாறு ஏழு மகள்மார்களும் கேட்கின்றனர் என 82 வயதான தந்தையொருவர் பாதுக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொலிஸார், அதனை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு தீர்மானித்து அந்த ஏழு மகள்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்தனர். அவர்கள் அனைவரும் சொகுசு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருப்பது தெரியவந்தது.

பெற்றோர்களை கவனித்துக்கொள்ள வேண்டிய முறைமை தொடர்பில் அந்த ஏழு பெண்களுக்கும் தெளிவூட்டிய பொலிஸார், தங்களுடைய தந்தையை மாறி, மாறி கவனித்துக்கொள்ளுமாறும் அறிவுரை வழங்கினர்.

பொலிஸாரின் அறிவுரையை ஏற்றுக்கொள்ள மறுத்த ஏழு பெண்களும், தங்களுடைய தந்தையை கவனித்துக்கொள்ள வேண்டுமாயின் மாதாந்தம் 2 இலட்சம் ரூபாய் பணத்தை தரவேண்டுமென பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மகள்மார்கள் இரண்டு இலட்சம் ரூபாயை கோருகின்றனர். எனினும், அவ்வளவு தொகையை தன்னால் தரமுடியாது எனத் தெரிவித்துள்ள 82 வயதான தந்தை, தன்னிடம் எந்தப் பணமும் இல்லை. மாத்தறை ரொட்டும்ப பிரதேசத்தில் உள்ள காணியை விற்ற பணத்திலேயே தன்னுடைய சிறுநீரகங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மிகுதி இருந்த பணத்தில் 4 இலட்சம் ரூபாயை கடைசி மகளுக்கு கொடுத்துவிட்டேன். கடந்த காலங்களில் அவருடனேயே வாழ்ந்து வந்தேன். எனினும், அவரும், மருமகனும் தன்னையும் தன்னுடைய மனைவியையும் பாதுக்க பிரதேசத்தில் உள்ள வாடகை வீடொன்றில் வாடகைக்கு அமர்த்திவிட்டு சென்றுவிட்டனர். இதனால் தாங்கள் இருவரும் பெரிதும் பாதிக்கப்பட்டோம் என்றும் 82 வயதான தந்தை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டறிந்த பொலிஸார், பிரச்சினையை தீர்க்க முடியாமையால், நீதிமன்றத்தை நாடுவதை தவிர வேறு வழியில்லை எனவும் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

இந்நிலையில், தந்தை, தான் தற்காலிகமாக பார்த்துக்கொள்கின்றேன் என தெரிவித்த பிலியந்தலையை வசிப்பிடமாகக் கொண்ட மகள், அவரை அழைத்துச் சென்றுவிட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

3.5 மில். அமெரிக்க டொலர்களை

## அவசர உதவித்தொகையாக வழங்க ஜப்பான் தீர்மானம்

இலங்கையில் நிலவும் சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலைக் கவனத்தில் கொண்டு, மனித நேய உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காக மேலதிகமாக 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிக அவசர உதவித் தொகையாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உணவுப் பொருட்களை உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP), உணவு, போஷாக்கு, சுகாதாரம், ஆரோக்கியம் போன்றவற்றுக்காக 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கத்தினூடாகவும், போஷாக்குக்காக 0.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ஊடாக இலங்கை மக்களுக்காக வழங்க முன்வந்துள்ளது எனவும், மே 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உதவி வழங்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, தற்போதைய இந்த அறிவிப்பினூடாக, தற்போதைய சூழலில் ஜப்பான் வழங்கியுள்ள நிதி உதவியின் மொத்தப் பெறுமதி 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. நீண்ட காலமாக ஜப்பானிய மக்கள் நட்புறவைப் பேணி வரும், இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மீண்டெழுவதற்கு, இந்த உதவி பங்களிப்பு வழங்கும் என ஜப்பான் எதிர்பார்க்கின்றது என அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் 6 ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோவில் இடம்பெற்ற சமாதான மாநாட்டின் போது மறைந்த ஜே.ஆர்.ஜயவர்தன ஆற்றியிருந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையிலிருந்து இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகியிருந்ததுடன், தற்போது 70 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. இக் காலப்பகுதியில் இலங்கையின் உற்ற நட்பு நாடாக, ஜப்பான் எப்போதும் இலங்கைக்கு ஆதரவளித்த வண்ணமுள்ளது. இந்த நட்புறவின் அடிப்படையில், இலங்கையில் மூன்று முன்னுரிமை பிரிவுகளின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்திக்கு ஜப்பான் ஆதரவளித்த வண்ணமுள்ளது. அவையாவன, (1) தர வளர்ச்சியை ஊக்குவித்தல், (2) உள்ளடக்கமான வளர்ச்சிக்காக அபிவிருத்திக்கான ஒன்றிணைவு மற்றும் (3) பாதிப்புறும் தன்மையை குறைத்தல் போன்றன. இதற்காக 140 பில்லியன் ஜப்பானிய யென்களுக்கு அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் மாத்திரம், இதுவரையில் 35.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை (செப்டெம்பர் மாதம் வரையில்) மானிய உதவியாக வழங்கியுள்ளோம். குறிப்பாக (2) மற்றும் (3) முன்னுரிமைப் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆதரவுகளினூடாக, ஜப்பானினால் உடனடி மற்றும் நடுத்தர மற்றும் நீண்ட கால உதவிகள் வழங்கப்பட்டு, இலங்கை மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கான திறனை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையின் நிலைபேறான விருத்திக்காக ஆதரவளிப்பை நாம் தொடர்வதுடன், இந்த மாதத்தின் பிற்பகுதியில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விஜயத்தினூடாக பரஸ்பர உறவை மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கின்றோம். இலங்கை மக்களுடன் எமது உறவை மேலும் வலிமைப்படுத்த ஜப்பானிய தூதரகம் எதிர்பார்க்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




100 நாள் செயல்முனைவின் 50 நாளில்

# திருமலையில் போராட்டம்

## பட்டங்களையும் பறக்கவிட்டு கவனயீர்ப்பு

■ தீஷான் அஹமட், ஹஸ்பர், அ.அச்சுதன்

“100 நாள் செயல்முனைவு” எனும் திட்டத்தின் கீழ், வடக்கு, கிழக்கு மக்களுக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கிடைக்கப்பெற வேண்டுமென வட, கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தின் 50ஆவது நாள் போராட்டம், திருகோணமலை கடற்கரையில் நேற்று திங்கட்கிழமை (19) முன்வைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு இதனை ஏற்பாடு செய்துள்ளதோடு, 50வது நாள் குரல்வழிப் போராட்டம், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரையில் இடம்பெற்ற போராட்டத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை பலூன்களில் பறக்கவிட்டதுடன், பட்டங்கள் விடப்பட்டு, பதாதைகளும் தொங்கவிடப்பட்டன.


அத்தோடு, வடகிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டுமென கடற்கரையில் கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டோர், “அரசியல் கைதிகளை விடுதலை செய்”, “பேச்சு சுதந்திரம் எமது உரிமை”, “வடகிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்”, “பயங்கரவாத சட்டத்தை நீக்கு” மற்றும் “நிலங்களை அபகரிக்காதே”, உள்ளிட்ட வாசகங்களை ஏந்தி, கோஷங்களையும் எழுப்பினர்.

சிவில் அமைப்பினர், இளைஞர்கள் என சுமார் 500க்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

விநாயகபுரம் கடற்கரையிலும்

## பட்டம் விட்டு கோரிக்கை



■ எஸ்.கார்த்திகேசு

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டுமென வலியுறுத்தும் 100 நாட்கள் செயல் முனையின் ஊடாக திருக்கோவில் - விநாயகபுரம் கடற்கரையிலும் மக்கள் வானில் பட்டம் விட்டு கோரிகை விடுத்தனர்.

இப் பட்டம் விடும் கவனயீர்ப்பை, வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது.



கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி

# மன்னாரில் கவனயீர்ப்பு




## 50ஆவது நாளில் ஏற்பாடு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் 50ஆவது நாளையொட்டி, நேற்று திங்கட்கிழமை (19) காலை 11 மணியளவில் மன்னார் - கீரி கடற்கரை பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தின் போது பட்டங்கள் ஏற்றப்பட்டன.

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப்பொருளில், வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெறவுள்ள செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்தக் கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர்கள், மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை இதன்போது முன்வைத்தனர்.

மேலும், பறக்கவிடப்பட்ட பட்டங்களில், “எங்கள் நிலம் எமக்கு வேண்டும்”, “நடமாடுவது எங்கள் உரிமை”, “பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை” மற்றும் “ஒன்று கூடுவது எங்கள் உரிமை” உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்டு பறக்கவிடப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன், கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பணியாளர்களும் கலந்துகொண்டார்கள்.




## 50 ஆவது நாளில் பட்டத்தில் கவனயீர்ப்பு



நிரந்தரமான அரசியல் தீர்வை வலுயுறுத்தி இடம்பெற்று வரும் 100 நாள் செயற்றிட்டத்தில், 50ஆவது நாளான நேற்று (19) கிளிநொச்சி – இரணைமடு குளம் அமைந்துள்ள பகுதியில் பட்டம் விட்டப்பட்டு, கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. “பயங்கரவாத தடைச் சட்டத்தை உடன் நிறுத்து” மற்றும் “வடக்கு, கிழக்கு மக்களூக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” போன்ற பதாதைகளை ஏந்தியிருந்தனர்.
(படங்கள் – சுப்பிரமணியம் பாஸ்கரன்)



## இறுதி மரியாதை

மறைந்த கல்முனை மாநகர சபை உறுப்பினரான அமரர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் இல்லம் சென்று, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி, இறுதி மரியாதை செலுத்தினார்.
(படம்: அஸ்லம் எஸ்.மௌலானா)

அரச அலுவலகங்களில்

# அரைக் கம்பத்தில் பறந்த தேசியக் கொடி

## மகாராணியின் மறைவுக்கு இரங்கல்



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் நேற்று (19) தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

இதன்படி, எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் பொது விடுமுறை தினமான நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியிலுள்ள அரச அலுவலகங்களிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான்குடி நகர சபைக்கு முன்னாலும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

## கோனகல படுகொலை; 23ஆவது நினைவு தினம்



■ எம்.எம்.அஹமட் அனாம்

அம்பாறை மாவட்டத்தின் கோனகல சிங்கள கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 23ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கோனகலயில் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்றது.

1999 செப்டெம்பர் 18ஆம் திகதி கோனகல கிராமத்தில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என 54 பேர் ஆயுதம் தாங்கிய குழுவினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு மரணித்தவர்களின் நினைவுத்தூபிக்கு அருகில் உறவினர்களின் பங்குபற்றுதலுடன் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றதுடன், உறவினர்களால் தீபம் ஏற்றி மரணித்தவர்களின் ஆத்ம சாந்திக்காக பிராத்தனையிலும் ஈடுபட்டனர்.



# தாதியர்களுக்கு சிறப்பு பயிற்சி

■ மு.தமிழ்ச்செல்வன்

வட மாகாணத்தில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள், மருத்துவ நிர்வாக விசேட வைத்திய நிபுணர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென விசேடமாக கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்த சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சதாசிவம் சிறீதரனால் தமிழ்மொழி மூலமான பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மருத்துவ நிர்வாக விசேட வைத்திய நிபுணர்களான டொக்டர் த.சத்தியமூர்த்தி, டொக்டர் த.வினோதன் மற்றும் டொக்டர் திலிப் லியனகே ஆகியோரால் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சிறப்பு வகுப்புகள் யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்டன.

இந்தப் பயிற்சிநெறியை மருத்துவ நிர்வாக பயிலுனரான டொக்டர் த.காண்டீபன் ஒருங்கிணைத்ததுடன், வடக்கின் மூத்த மருத்துவ நிர்வாகிகளுள் ஒருவரான டொக்டர் சிறீ பவானந்தராஜா மேற்பார்வை செய்திருந்தார்.

தொடர்ந்தும் வடக்கின் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சிறப்பு வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

கசிப்பு மற்றும்

# வாள்களுடன் ஒருவர் கைது



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - ஆணைக்கோட்டை பகுதியில் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் 03 வாள்கள் என்பவற்றுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஆணைக்கோட்டை பகுதியில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் நபர் ஒருவர் ஈடுபட்டு வருவதாக யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த புலனாய்வுப் பிரிவினர் குறித்த பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

அதன்போது அங்கிருந்து 08 லீட்டர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், உபகரணங்கள், 50 லீட்டர் கோடா மற்றும் 3 வாள்கள் என்பவற்றை மீட்டதுடன், அங்கிருந்த 38 வயதுடைய சந்தேகநபரையும் கைது செய்தனர்.

### தோட்டக் கம்பனிகளின்

# சூழ்ச்சிக்குள் சிக்கிவிடக்கூடாது

## எச்சரிக்கிறார் ஜீவன் எம்.பி

■ எஸ்.கணேசன்

தோட்டக் கம்பனிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் தொழிலாளர்கள் சிக்கிவிடக்கூடாது என தெரிவித்துள்ள நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், ஒன்றிணைந்து, ஒருமித்த நோக்குடன் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தால் வெற்றி நிச்சயம். என்றார்.

மஸ்கெலியா -அம்பாள்ஸ் மண்டபத்தில் தோட்டத் தொழிலாளர்களை ஜீவன் தொண்டமான் நேற்று முன்தினம் (18) சந்தித்து கலந்துரையாடிய பின்னர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

மேலும் தெரிவித்த அவர், "மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனமானது, தொழிலாளர்களை துன்புறுத்திவருகின்றது. இந்நிலையில் தமது தொழில்சார் உரிமைகளுக்காக தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

நாமும் அதற்கு பக்கபலமாக இருக்கின்றோம். எதற்காக தற்போது தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என நீங்கள் கேட்கலாம். ஆயிரம் ரூபாய் தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. அதனால்தான் நாம் நடவடிக்கையில் இறங்கவில்லை.

நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்துள்ளது. தொழிற்சங்கங்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. எமது கோரிக்கை நியாயமானது. அதனால்தான் போராடுகின்றோம். சம்பள நிர்ணய சபைக்கு நாளை நாம் சென்றால்கூட எமக்குதான் சாதகமாக அமையும்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையில் ஒற்றுமை இருக்க வேண்டும்.

அவ்வாறு ஒற்றுமை இருப்பது எமக்கு பலம். எனினும், அந்த ஒற்றுமை எம்மிடையே முழுமையாக இல்லை. அது எமது பலவீனமாகும். எமது இந்த பலவீனம் நிர்வாகத்துக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றது. எமது ஒற்றுமையை கண்டு தோட்ட நிர்வாகங்கள் நடுங்க வேண்டும்.



ஆயிரம் ரூபாவை ஓரணியில் நின்று கேட்க வலியுறுத்தினோம். அச்சத்தால் தொழிலாளர்கள் பிளவுபட்டு நின்றனர். துரைமாரை கண்டு அஞ்ச வேண்டியதில்லை. கட்சி, தொழிற்சங்க பேதங்களும் அவசியமில்லை என்றார்.

மலையகத்துக்கு திடீரென வரும் சில அரசியல்வாதிகள், தொழிற்சங்கங்களை விமர்சிப்பார்கள், ஆனால் கம்பனிகளை விமர்சிப்பதில்லை. அப்படியானவர்கள் கூறும் கருத்தை எம்மவர்களில் சிலர் நம்புவதும் உண்டு. இந்நிலைமையும் மாற வேண்டும் என்றார்.

# ஆணின் சடலம் மீட்பு

■ எம். குமார்

பலாங்கொடை- ஹட்டன் பிரதான வீதியில் கெசல்கொட்டுவ பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள வயலுக்கு நீர் திறந்து விடுவதற்கு நேற்றுமுன்தினம் (18) மாலை சென்ற ஒருவர், சடலம் தொடர்பில், பின்னவல பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்ததுடன், உயிரிழந்தவர் கெசல்கொட்டுவ பகுதியை சேர்ந்த 72 வயதுடைய கருப்பன் சுப்ரமணியம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



உயிரிழந்தவர் கால் தவறி 20 அடி பள்ளத்தில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவர் மது போதையில், அவ்வீதியில் நடந்து சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் மாயம்

■ ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான்காம் ஆண்டில் கல்விக் கற்கும், யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்த மாணவனே, கடந்த 16ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது பெற்றோர் பேராதனைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாணவனின் கையடக்கத் தொலைபேசிக்கு அவரது நண்பர்கள் அழைப்பை ஏற்படுத்திய போது பதில்



கிடைக்காததால், விடுதி உரிமையாளரிடம் விசாரித்துள்ளனர். இந்நிலையில், மாணவனின் அறை மூடியிருப்பதாகவே விடுதி உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

பின்னர் நேற்று (18) மாலை மாணவன் தங்கியிருந்த அறையை சோதனையிட்ட போது, மாணவனால் எழுதப்பட்ட கடிதம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தான் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள போவதாக, எழுதப்பட்டிருந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### மோட்டார் சைக்கிளை

# சமையலறைக்குள் ஒளித்தவர் கைது

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை- விகாரகொட பிரதேசத்தில் காணாமல் போன மோட்டார் சைக்கிளொன்று வீடொன்றின் சமையலறையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பதுளை- உடகொஹவில பிரசேத்திலுள்ள வீடொன்றின் சமையல் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளே பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என்றும் மோட்டார் சைக்கிள் திருட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து பாதுகாப்பு கமெரா உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட விசாரணையை அடுத்து, மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 35 வயதான சந்தேகநபரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.





# கருத்தரங்கு

இவ்வருடம் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு, இலங்கை வங்கி மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 'நென மிஹிர' என்ற புலமைப்பரிசில் இலவச கருத்தரங்கை நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் பிரதம முகாமையாளர் மற்றும் நுவரெலியா வலய கல்வி அபிவிருத்தி உதவி கல்விப் பணிப்பாளர் கனேஸ்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.( பி.கேதீஸ்)

### பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள்

# மூவருக்கு வகுப்புத் தடை

■ ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டப்பீட மாணவர்கள் மூவருக்கு வகுப்புத் தடை விதிக்க பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த சட்ட பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களைத் தாக்கியமை தொடர்பாகவே இவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் 14ஆம் திகதி பகிடிவதைத் தொடர்பாகவே தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இதில் காயமடைந்த நான்கு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர், சட்டபீடத்தின் அனைத்து கற்பித்தல் செயற்பாடுகளையும் நிகழ்நிலை ஊடாக மாத்திரம் முன்னெடுக்க பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ள நிலையில், சில மாணவர்கள் இந்த தீர்மானத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, பல்கலைக்கழகத்துக்குள் தங்கி இருப்பதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### கெட்டம்பே விஹாரையின் ஒரு பகுதி

# மகாவலிக்குள் மூழ்கும் ஆபத்து

■ ஷேன் செனவிரத்ன

500 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட கெட்டம்பே சைத்திய வளாகம் மகாவலி ஆற்றில் மூழ்கும் ஆபத்தில் இருப்பதாக கெப்பிட்டியாகொட சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

குறித்த வளாகத்தில் பல கட்டிடங்களுக்கு அருகில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய தேரர், இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்காவிடின், வரலாற்று புனித பூமியின் ஒரு பகுதி மகாவலி ஆற்றுக்குள் மூழ்குவதைத் தடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த பாதிப்பைத் தடுக்கும் வகையில் கடந்த ஆண்டு, 210 மில்லியன் ரூபாய் பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நிதி சிக்கல்கள் காரணமாக, பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டதாகவும் தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிவித்தல் கிடைத்ததையடுத்து விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் மகாவலி அமைச்சர் ரொஷான் ரணசிங்க, உரிய அதிகாரிகளுடன் கெட்டம்பே பகுதிக்கு



விஜயம் செய்து, அங்குள்ள பாதுகாப்பற்ற நிலைமையை அவதானித்ததோடு, உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

# சட்டவிரோத மதுவால் தோட்டங்களில் சிக்கல்

■ சுதத் எச்.எம். ஹேவா

பெரும் தோட்டங்களில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோதமான மதுபான விற்பனையால், தோட்டத்தொழிலாளர்களில் வாழ்வில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், அவர்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதிலும் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

தோட்டங்களில், மதுபானம் மற்றும் பியர் ஆகியன சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வது அதிகரித்துள்ளது என்று பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பெண்கள் தெரிவித்துள்ளனர்.

பெரும் தோட்டங்களை அண்மித்திருக்கின்ற மதுபானசாலைகளில் உரிமையாளர்கள் சிலர், முகர்வர்களைக் கொண்டு, தோட்டங்களுக்குள் மதுபானங்களை கூடிய விலைக்கு விற்பனைச் செய்து வருவதாகவும், சட்டவி ரோதமான இந்த மது விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது என்றும் பெண்கள் குற்றஞ்சாட்டினர்.

இன்னும் சிலர் கடன் அடிப்படையில், பெருந்தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மதுபானங்களை விற்பனைச் செய்கின்றனர். இதனால், தங்களுடைய கணவன்மார், வாங்கும் சம்பளத்தில் அரைவாசிக்கு மேல், மதுபானத்துக்கான கடனை செலுத்த வேண்டியுள்ளது என்றும் இதனால் குடும்பச் சுமையும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது என அப்பெண்கள் தெரிவித்துள்ளனர்.

தோட்டங்களில் இவ்வாறான சட்டவிரோதமான மதுபான விற்பனை அதிகரித்துள்ளமையால், இளைஞர்கள்



### அம்பேவெல ஹைலண்ட் பால் தொழிற்சாலையில்

# பாரிய எரிபொருள் மோசடி

## குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

அம்பேவெல ஹைலண்ட் பால் தொழிற்சாலையில் இடம்பெற்ற பாரிய எரிபொருள் மோசடி தொடர்பான ஆய்வு அறிக்கை கிடைத்துள்ளதாகவும், அதில் ஈடுபட்ட பல ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேணுகா பெரேரா தெரிவித்தார்.

அம்பேவெல ஹைலண்ட் பால் தொழிற்சாலையின் கண்காணிப்புச் சுற்றுப்பயணத்தில் நேற்று (19) கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு.கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தை இலாபகரமான நிறுவனமாக மாற்றுவதற்கு வினைத்திறனுடனும் நேர்மையுடனும் பணியாற்றாவிட்டால் இதனை தனியார் மயமாக்கும் அபாயம் ஏற்படம் என்றும் கடந்த 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த நிறுவனத்தில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ஒரு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் லீற்றர்களுக்கு மேல் டீசல் மோசடியாக விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அதன்படி கடந்த வாரம் இதற்கான



விசாரணைக் குழுவை நியமித்து, விசாரணை அறிக்கையை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

### கோனப்பிட்டிய தோட்டத் தொழிலாளர்கள்

# 2 மணி நேரம் பணிபகிஷ்கரிப்பு

■ ஆ.ரமேஸ்

கோனப்பிட்டிய தோட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுத்து நேற்று (19) காலை இரண்டு மணி நேரம் பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டனர்.

கோனப்பிட்டிய தோட்ட தேயிலை மலைகளில் தொடர்ச்சியாக, தேயிலைக் கொழுந்துகள் களவாடப்பட்டு வருகின்றமைத் தொடர்பில் தலையிட்டு, சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என தோட்ட நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டனர்.

கோனப்பிட்டிய தோட்டத்தில் தொழிலற்று இருக்கும் சிலர், இரவோடு இரவாக தேயிலைக் கொழுந்தை திருடி, தனியார் தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு கிலோ கிராம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு, விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

# விஷமிகளின் வலையில் சிக்கிவிடாது விழிப்பாக இருங்கள்

பொருளாதார நெருக்கடியால், பெரும்பான்மையான இலங்கையர்கள், உணவுக்கு அல்லாடுகின்றமையை கண்கூடாகக் காண்கிறோம். இலங்கை மக்களில் 87 இலட்சம் பேர் போதிய உணவை உண்பதில்லை என்றும் ஐந்தில் இரண்டு குடும்பங்கள், தங்களது வருமானத்தில் 75 சதவீதத்தை உணவுக்காகவே செலவிடுவதாகவும் உலக உணவுத் திட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தினக் கூலியையோ அல்லது மாதாந்த வருமானத்தையோ பெறும் நபர்கள், தமது சம்பளத்தின் பெரும் பகுதியை உணவுக்காகவே செலவிடுகின்றனர். இந்நிலையில், தமது வருமானத்தை உயர்த்தி குடும்பத்தை எவ்வாறாவது கரை சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் வெளிநாடு செல்ல பலர் முயல்வதை கடவுச்சீட்டு வரிசை காட்டி நிற்கிறது.

கடந்த 8 மாதங்களில் 7 இலட்சத்துக்கும் அதிகமான கடவுச்சீட்டுகள் பெறப்பட்டுள்ளதுடன், கணிசமான தொகையினர், வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடிச் சென்றுள்ளனர். முன்னர் பலரிடம் வெளிநாட்டு மோகம் இருந்தபோதும், பொருளாதார நெருக்கடியே வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளை விட, ஐரோப்பிய நாடுகள் மற்றும் சில அபிவிருத்தியடைந்த நாடுகளையே, பலரும் விரும்புகின்றனர். இதனை அறிந்து கொண்டுள்ள மோசடிக் கும்பல்கள் பல, தங்களது வலையில் அவர்களை சிக்கவைத்து பெரும் பணத்தை சுருட்டி வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் தொழில் பெற்றுத் தருவதாக கூறி, 5 கோடி ரூபாய்க்கும் அதிக நிதி மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கடந்த சனிக்கிழமையன்று நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதேபோல் வெளிச்சத்துக்கு வராத பல சம்பவங்களும் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றன. அவற்றுக்கான முக்கிய காரணம் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் கண்கவர் விளம்பரங்களாகும்.

இந்த மோசடிக்கார விஷமிகள், ஐரோப்பிய நாடுகள் அல்லது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு சென்று விட்டால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி குடும்பத்துடன் சென்று அங்கேயே தங்கிவிடலாம் என்ற எண்ணத்தையும், ஆசை என்னும் பசியையும் விளம்பரங்கள் மூலமும் பசப்பு வார்த்தைகள் மூலமும் தூண்டி, பொறியில் சிக்க வைக்கின்றனர்.

இந்த விடயத்தில், தகவல்களை உறுதிப்படுத்தாமல் ஏமாறுபவர்களின் கஷ்டம் அவர்களின் கண்களை மறைத்து விடுகிறது. விமோசனம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையும் முன்னேற வேண்டும் என்ற எண்ணமும் அவர்களை சிந்திக்க விடுவதில்லை போலும்.

இந்த நிலையில், வேலைவாய்ப்பு வழங்குவதாக வாக்குறுதியளித்து மோசடி செய்பவர்கள் தொடர்பில், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பணியகம் அண்மையில் அறிவித்திருந்தது.

பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான wslbfe.lk அல்லது 1989 என்ற 24 மணி நேர அவசர தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்வதன் மூலம், அனுமதிப்பத்திரம் உள்ள வேலைவாய்ப்பு முகவர்களை அடையாளம் கண்டு கொண்டு செயற்படலாம்.

தற்போது இருக்கும் நெருக்கடியில், கடன் வாங்கியோ அல்லது உள்ள சொத்துகளை விற்றோ பெருந்தொகை பணத்தை கயவர்களிடம் காவு கொடுத்து விட்டு எஞ்சிய வாழ்க்கையையும் குடும்பத்தையும் மீண்டு வர முடியாத பெரும் கடன் சுமைக்குள் தள்ளிவிடாது, சிந்தித்து செயற்படுவதே காலத்தின் தேவையாகவுள்ளது.

www.tamilmirror.lk
தமிழ்Mirror க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்களுடைய எண்ணங்கள், பேச்சுகள், செயல்களை யாவரும் கேட்டேயாக வேண்டும்; பார்த்தேயாக வேண்டும் என்றும் அதுவே சரியானதும் நியாயமானது என்றும் அடம்பிடிக்கக் கூடாது.

நீங்கள் நல்லதைச் சொன்னால் புரிந்து கொள்வார்கள். ஆனால், அதை உடன் கேட்டு, 'ஆமாம் சரி' எனச் சொல்வார்கள் என எதிர்பார்க்கலாகாது.

யாவரையும் சிந்திக்க அனுமதிக்க வேண்டும். எந்தவிதத்திலும் குறுக்கீடு கூடாது. பத்துப்பேர் பலரவிதமாகப் பேசுவார்கள். அதைக் கேட்டால், கேட்பவர்களுக்குக் குழப்மே வரும். ஒருசிலர் ஒருதரம் சொன்னவற்றையே திரும்பத் திரும்பச் சொல்வார்கள். அதைக் கேட்பது மிகவும் கஷ்டமானது.

எல்லோருக்கும் அறிவு உண்டு; சிந்திக்கவும் தெரியும். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள், பிறரைப் பேச்சாலே இம்சைப்படுத்தலாகாது.

அமைதியாக இருப்பவர்களை ஒன்றுமே தெரியாதவர்கள் என எண்ணுவதே தவறானது. ஒன்றுமே தெரியாதவர்கள் அதிகம் பேசுகிறார்கள்.

மென்மையாகப் பேசுக; பிறர் விளங்கும் வண்ணம் உரையாற்றுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## அஷ்ரப்புக்குப் பிறகு

# நீங்கள் சாதித்தது என்ன?

மொஹமட் பாதுஷா

தந்தை ஒருவர் தன்னுடைய மகனிடம் "ஆப்ரகாம் லிங்கன், வீதி விளக்கின் கீழ் இருந்து படித்துத்தான் பின்னாளில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வந்தார்" என்ற வரலாற்றுக் கதையைச் சொன்னாராம். சற்று குறும்புத்தனமான அந்த மகன் திடீரென, "அப்படியென்றால், நீங்கள் அவ்வாறு படிக்காமல் அப்போது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்"? என்று தந்தையைப் பார்த்துக் கேட்டானாம்.

முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் முன்னோடியாகத் திகழ்ந்த மர்ஹூம் எம். எச். எம் அஷ்ரப் மரணித்த பிறகு, அவரைக் கொண்டாடுகின்ற, அவரை நினைத்து கண்ணீர் வடிக்கின்ற இன்றைய முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும், இதுபோன்ற கேள்வி ஒன்றைக் கேட்கத் தோன்றுகின்றது.

மறைந்த தலைவர் அஷ்ரப், முஸ்லிம் சமூகத்துக்காகப் போராடினார்; உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தார்; பாரிய அபிவிருத்திகளைச் செய்தார்; சமூகத்துக்காக நெஞ்சை நிமிர்த்தி நின்றார் என்று சொல்லிக் கொண்டே, காலத்தைக் கழிக்கும் முஸ்லிம் தலைவர்களும் எம்.பிக்களும் அவரது மறைவுக்கு பின்னரான காலப்பகுதியில், எதைச் சாதித்துள்ளார்கள் என்று கேட்க வேண்டியுள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றை, அஷ்ரபுக்கு முன் - அஷ்ரபுக்கு பின் என நோக்கலாம். அவரை விடுத்து, முஸ்லிம் அரசியல் வரலாற்றை இனி எழுதவியலாத அளவுக்கு, குறிப்பிடத்தக்க இடத்தை பிடித்துள்ளார். அத்துடன் அவர் விட்டுச் சென்ற 'தலைவர்' என்ற இடம், இன்று வரை காலியாகவே உள்ளது.

அந்த வகையில், மர்ஹூம் அஷ்ரப் கொண்டாடப்பட வேண்டியவர்; அவரது கொள்கைகளும் சேவைகளும், காலகாலத்துக்கும் நினைவூட்டப்பட வேண்டியவை. தற்காலத் தலைவர்களைப் பார்த்து, 'இதுதான் சரியான தலைமைத்துவம்' என்று நம்பிக் கொண்டிருக்கின்ற இளைய சமூதாயத்துக்கு 'உண்மையான தலைமைத்துவம் எது' என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவும் அவரது ஆளுமைகளைப் பேச வேண்டியுள்ளது.

ஆனால், 11 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும் சுமார் ஆறு வருடங்கள் மட்டுமே ஓர் அமைச்சராகவும் பதவி வகித்த மர்ஹூம் அஷ்ரப், அதனைச் செய்தார், இதனைச் செய்தார், அப்படி இருந்தார், இப்படி இருந்தார் என்று புகழ்பாடுகின்ற அவரது அரசியல் வாரிசுகள், இந்த 22 வருட காலத்திலும் முஸ்லிம் சமூகத்துக்காக எதைச் செய்துள்ளார்கள்?

மறைந்த தலைவரின் கொள்கைகளையும் அவர் காட்டித் தந்த வழிமுறைகளையும் பின்பற்றாமல், முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வெறுமனே அவற்றைப் பற்றிப் பெருமை பேசுவதற்கும் நினைவுகூருவதற்கும் என்ன தார்மிக அருகதை இருக்கின்றது என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

எம். எச். எம் அஷ்ரப், தனது அரசியல் நண்பர்களுடன் இணைந்து, முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார். தெற்கில் அரசாங்கத்துடனும் வடக்கு, கிழக்கில் தமிழர்களுடனும் ஒரு மிதமான உறவைப் பேணிக் கொண்டார். ஆனால், அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் எதிர்க்க வேண்டிய இடத்தில் எதிர்க்கும் துணிச்சல் அவருக்கு இருந்தது.

இது, பெருந்தேசிய அரசியலில் அவரை ஒரு சிம்மசொப்பனமாக ஆக்கியிருந்தது எனலாம். அதுமட்டுமன்றி, கிழக்கில் இருந்து அஷ்ரப் பெருவளர்ச்சி கண்டு வருவது, தென்னிலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு கூட வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டிருந்தது.

அவர் முஸ்லிம் காங்கிரஸை தீர்மானிக்கும் சக்தியாக உயர்த்தி, பேரம்பேசும் அரசியலின் ஊடாக பலவற்றைச் சாதித்தார். பாராளுமன்ற உறுப்புரிமைக்கான மாவட்ட வெட்டுப்புள்ளியின் எல்லையைக் குறைக்க வழிகோலியமை இதில் முக்கியமானது. அதனாலேயே பலருக்கு எம்.பியாகும் வாய்ப்புக் கிடைத்தது.

இதைத் தவிர, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுக வேலைத்திட்டம், இனபேதமின்றி பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் என அவரது சேவைகள் தொடர்ந்தன. அவர் காலகாலமும் பேசப்படக் கூடியளவுக்கான ஓர் அரசியலை, மிக குறுகிய காலத்துக்குள் செய்து விட்டுப் போயிருக்கின்றார் என்பது கண்கூடு.

ஆனால், அவரை விட அதிகப்படியான அமைச்சுகளையும் அதிகாரங்களையும் ஒப்பீட்டளவில் அதிக காலம் வகித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா மற்றும் ஹசன்அலி, பசீர் சேகுதாவூத். ஹரீஸ் புதிதாக எம்.பியாக தெரிவான முஷாரப் வரை (கடந்தகால, தற்கால) சுமார் 30 -40 வரையிலான முஸ்லிம் எம்.பிக்கள் என்ன செய்திருக்கின்றார்கள்?

வீதி செப்பனிடுதல், கட்டடம் கட்டுதல் போன்றவற்றை மையமாகக் கொண்ட அபிவிருத்தி அரசியலை, ஓரிரு முஸ்லிம் எம்.பிக்கள் கொஞ்சம் செய்திருக்கிறார்கள். அதைவிடுத்து, முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளடங்கலாக நீண்டகாலப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதா? அபிலாஷைகள் முன்கொண்டு செல்லப்பட்டுள்ளதா? இல்லையே!

மாறாக, பேரம் பேசும் அரசியல் என்பது பதவிக்காக, பணத்துக்காக சோரம்போகும் அரசியலாக ஆகியிருக்கின்றது. இணக்க அரசியல் முட்டுக் கொடுக்கும் அரசியலாக உருமாற்றப்பட்டு இருக்கின்றது.

மறைந்த அஷ்ரப் தொடர்பிலும் பல விமர்சனக் கண்ணோட்டங்கள் இருக்கின்றன. அவர் தவறுகளுக்கு அப்பாற்பட்டவரும் அல்ல. அவர் செய்தது எல்லாம் சரி என்று கூறுவதற்கும் இல்லை. ஆனால், இப்போதிருக்கின்ற தலைவர்கள், எம். பிக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அவர் மிக உயரத்தில் இருக்கின்றார் என்பதுதான் கவனிப்புக்கு உரியது.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது விடயம், எம். எச். எம் அஷ்ரப் தானாகவே ஒரு சமூக உணர்வால் உந்தப்பட்டு அரசியலுக்கு வந்தார். முஸ்லிம் சமூகத்துக்கு விடிவு கிடைக்க வேண்டும் என்ற வேட்கை, அவர் ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட அந்த நொடி வரைக்கும் இருந்தது.

மக்களை நேசித்தார்; கட்சியின் ஒவ்வோர் உறுப்பினரையும் மதிப்பவராக இருந்தார். ஆயிரம் பேர் நிறைந்த கூட்டத்திலும், யார் கட்சிக்காரர் என்பதை சரியாக அடையாளம் காணும் ஆற்றல் அவருக்கு இருந்தது. எல்லா வகையான ஆளுமைகளும் இருந்தன. நேரகாலத்துடன் எழுந்து மக்களுக்காக வேலை செய்பவராக இருந்தார்.

மக்கள் அவரைச் சந்திப்பது, கடினமான காரியமாக இருக்கவில்லை. முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம், இன்னும் 20 வருடங்களுக்குப் பின்னர் எப்படி இருக்க வேண்டும் எனத் தூரநோக்கத்துடன் சிந்தித்தார். அவரது மரணம், ஒரு திட்டமிட்ட சதி என்றால், இவைதான் அதற்கான காரணமாகக் கூட இருக்கலாம்.

ஆனால், அவருக்குப் பின்வந்த தலைவர்கள், தளபதிகளிடத்தில் இந்தப் பண்புகள் அறவே இருக்கவில்லை. சிலரிடம் இருந்த அஷ்ரபின் சாயல்களும் இரண்டொரு வருடங்களில் இருந்த இடம் தெரியாமல் போயின.

முஸ்லிம் சமூகமும் அப்படித்தான் மாறிப் போயுள்ளது. நல்லவர்களைத் தலைவர்களாகத் தெரிவு செய்வதை விடுத்து பதவி, பணம் உள்ளவர்களுக்குப் பின்னால் போவதற்கே பெரும்பாலான முஸ்லிம்கள் விரும்புகின்றனர். கட்சிகளுக்கு உண்மைப் போராளிகள் இருந்த காலம் போய், இன்று 'பேஸ்புக்'கை மையமாகக் கொண்ட அறிவிலித்தனமான, 'எடுபிடிகள்' உருவாகியுள்ளனர்.

இந்தப் பின்னணியில், மறைந்த தலைவர் அஷ்ரப் இரண்டு சந்தர்ப்பந்தங்களில் நினைவுகூரப்படுகின்றார். ஒன்று, தேர்தல் மேடைகளிலும் போஸ்டர்களிலும் பிரசாரப்படுத்தப்படுகின்றார். அடுத்ததாக, அவர் மரணித்த செப்டெம்பர் 16 இல் நினைவு கூரப்படுகின்றார்.

இம்முறையும்,அங்குமிங்குமாக முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் மறைந்த தலைவருக்கான நினைவு நிகழ்வுகளை நடத்தின. அவரது கொள்கைகள் தூசு தட்டப்பட்டன; அவரது பெருமைகள் பேசப்பட்டன. தேர்தல் நெருங்க நெருங்க இந்தப் போக்கு இன்னும் தீவிரமாக இருக்கும்.

முஸ்லிம்களால், அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்வோரால் மர்ஹூம் அஷ்ரபின் இடைவெளி இன்றும் உணரப்படுகின்றது. 'அவர் போன்ற ஒரு தலைமைத்துவம் இல்லாது போய்விட்டதே' என்று அங்கலாய்க்கின்றனர்.

ஆனால், நல்ல மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும் மக்களை ஏமாற்றும் பேர்வழிகளை வீட்டுக்கு அனுப்புவதற்கும் முஸ்லிம் சமூகம் துணியவில்லை. மீண்டும் மீண்டும் அரசியல் வியாபாரிகளைத்தான் மக்கள் தெரிவு செய்து கொண்டிருக்கின்றனர்.

இருப்பினும், தலைமைத்துவ இடைவெளியை இன்றுவரை முஸ்லிம் சமூகம் உணர்கின்றது என்றால், அதன் அர்த்தம், இத்தனை கட்சிகளாலும் முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களாலும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ அஷ்ரபின் இடத்தை ஒரு இம்மியளவு கூட நிரப்ப முடியவில்லை என்பதுதான்!

அஷ்ரப் செய்த அரசியலைத் தாண்டியும் சமூக அரசியலைக் கொண்டு செல்வதற்கு இன்னும் இடமிருக்கின்றது. அதற்கான காலத்தின் தேவையும் முஸ்லிம் சமூகத்துக்கு உள்ளது. ஆனால், 1970களில் பெருந்தேசிய கட்சிகளின் ஓர் அங்கமாக முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இருந்ததைப் போன்றதொரு நிலையிலேயே, இப்போது மீண்டும் 'மறைமுக முகவர்களாக' முஸ்லிம் அரசியல் அணிகள் மாறியிருக்கின்றன.

இந்த இலட்சணத்தில், முஸ்லிம் சமூக விடுதலை என்றும் நாங்கள் அஷ்ரபின் அரசியல் பாதையில் பயணிக்கின்றோம் என்றும் கூறுவது முரண் நகையான போக்காகும். நாங்கள் செல்வதுதான் அவரது வழிமுறை என்ற தோரணையில் மக்களை ஏமாற்றுவது அதைவிடப் பெரிய சமூகத் துரோகமாகமாகும்.

## கடிதங்கள்

### துணுக்காய் – அம்பலப்பெருமாள்

### பிரதான வீதியைப் புனரமைக்க கோரிக்கை


முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால், குறித்த கிராமங்களில் வாழும் 1,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள், பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு உள்ளிட்ட பகுதிகளுக்கான பிரதான வீதியாகக் காணப்படும் துணுக்காய் - அம்பலப்பெருமாள் சந்திவரைக்குமான வீதி பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வின்போது, முதன் முதலில் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட இப்பகுதிகளின் அடிப்படை வசதிகள் இன்று வரையும்பூர்த்தி செய்யப்படவில்லை .

தமது கிராமங்களில் எந்த தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் அதாவது அடிப்படை மருத்துவ வசதிகளைப் பெறக்கூடிய மருத்துவமனைகள், மேலதிக கல்வி வசதிகள், உயர்தர வகுப்புக்கள் உள்ளிட்ட எந்தத் தேவைக்கும் 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மல்லாவிக்கு அல்லது 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிளிநொச்சிக்கு செல்லவேண்டும் எனவும் தமது கிராமங்களுக்கான பிரதான வீதிகளை புனரமைத்து தருவதுடன் தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமலாபாலின் அதிரடி



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டு நடித்தவர் நடிகை அமலாபால். எனினும், ஆடை திரைப்படத்துக்கு பிறகு தமிழ் சினிமாவில் அமலாபாலுக்கு சுத்தமாக பட வாய்ப்பு இல்லாமல் போனது.

தற்போது காடவர் திரைப்படத்தின் மூலம் மீண்டும் தமிழ் சினிமாவில் ரி என்ட்ரி கொடுத்துள்ளார். படத்தை பொருத்தவரையில் நல்ல வரவேற்பு தான் பெற்றது.

இந்நிலையில், தெலுங்கு சினிமாவில் அதிக திரைப்படங்களில் நடிக்காதற்கான காரணத்தை வெளிப்படையாக கூறியுள்ளார்.

அதாவது தெலுங்கு திரைப்படங்களில் அதிகம் குடும்பபங்கான கதைகளை இடம்பெறும்.

இதில் பெரும்பாலும் கமர்சியல் திரைப்படங்களே இடம்பெறுவதால் ஹீரோயின்கள் பாடல் மற்றும் காதல் காட்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள்.

இதனால் அப்படிப்பட்ட கதாபாத்திரங்களில் நடிக்க எனக்கு விருப்பமில்லை.

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் மட்டுமே தான் நடிக்க விரும்புகிறேன். இதற்காக தான் தெலுங்கு சினிமாவில் இருந்து நீண்ட காலமாக விலகி உள்ளேன்.

மேலும் எந்த மொழியாக இருந்தாலும் தனக்கு கதை பிடித்திருந்தால் கண்டிப்பாக அந்த படத்தில் நான் நடிப்பேன் என்ற அமலாபால் கூறியுள்ளார்.

# ஹெட்ரிக் அடிக்க வருகிறார் 'வாத்தி'



தனுஷ் நடித்த 'வாத்தி' திரைப்படம் இந்த ஆண்டு இறுதிக்குள் வெளியாகும் என ஏற்கெனவே தகவல் வெளியான நிலையில் தற்போது டிசெம்பர் 2ஆம் திகதி இந்தத் திரைப்படம் வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனுஷ், சம்யுக்தா மேனன், சாய்குமார், சமுத்திரகனி உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்தத் திரைப்படத்தை வெங்கி அட்லுரி இயக்கியுள்ளார். தமிழ், தெலுங்கு மொழிகளில் உருவாகியுள்ள திரைப்படத்துக்கு ஜிவி பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

ஏற்கெனவே தனுஷின் 'திருச்சிற்றம்பலம்' திரைப்படம் மிகப் பெரிய வெற்றியடைந்த நிலையில் 'நானே வருவேன்' மற்றும் 'வாத்தி' ஆகிய இரண்டு திரைப்படங்களும் வெற்றி பெற்றால் தனுஷ்க்கு இந்த ஆண்டு ஹெட்ரிக் வெற்றி கிடைக்கும்.

# கனவு படங்களில் நாயகன் சூர்யா



தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குநர்களான வெற்றிமாறன், லோகேஷ் கனகராஜ், சிறுத்தை சிவா மற்றும் பா ரஞ்சித் ஆகிய நான்கு இயக்குநர்களின் கனவு திரைப்படங்களிலும் சூர்யா நடித்து வருகிறார்.

பிரபல இயக்குநர் சிறுத்தை சிவாவின் கனவு திரைப்படம் சரித்திர கதையம்சம் கொண்ட 'சூர்யா 42'. இந்த திரைப்படத்தில் சூர்யா 5 கேரக்டர்களில் நடித்து வருகிறார்.

வெற்றிமாறனின் கனவு திரைப்படம் ஜல்லிக்கட்டு கதையம்சம் கொண்ட 'வாடிவாசல்'. இந்தத் திரைப்படத்திலும் சூர்யா ஹீரோவாக நடிக்க இருக்கிறார்.

அதேபோல் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தனது பேட்டியில் தனது கனவு திரைப்படம் 'இரும்புக்கை மாயாவி' என்று கூறிய நிலையில் இந்தத் திரைப்படத்திலும் சூர்யா தான் நடிக்க உள்ளார்.

அதேபோல் அண்மையில் பேட்டியளித்த இயக்குநர் பா ரஞ்சித் தனது வாழ்க்கையின் கனவு படம் 'ஜெர்மன்' என்றும் கூறியுள்ள நிலையில் அந்தத் திரைப்படத்திலும் சூர்யா தான் நடிக்க உள்ளார்.

ஏற்கெனவே பாலாவின் கனவு திரைப்படமான 'வணங்கான்' திரைப்படத்திலும் சூர்யா நடித்து வருகிறார்.

மொத்தத்தில் தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குநர்களின் கனவு திரைப்படங்கள் அனைத்திலுமே சூர்யா ஹீரோவாக நடித்து வருவது ஆச்சரியம்.



# "வெந்து தணிந்தது காடு"

சிம்பு நடிப்பில், கௌதம் மேனன் இயக்கிய 'வெந்து தணிந்தது காடு' திரைப்படம் கடந்த வாரம் வெளியாகி வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நான்கு நாட்களிலும் நல்ல வசூல் செய்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

திரைப்படத்தின் கிளைமாக்ஸில் இரண்டாம் பாகத்துக்கு இயக்குநர் கௌதம் மேனன் லீட் கொடுத்துள்ள நிலையில் இரண்டாம் பாகம் உருவாக இருப்பது கிட்டத்தட்ட உறுதியாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தின் சக்சஸ் மீட்டில் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ், இந்தத் திரைப்படத்தின் இரண்டாம் பாகம் குறித்து தகவலை தெரிவித்தார்.

'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தின் பணிகள் தொடங்கி விட்டதாகவும், ஜெயமோகன் மற்றும் கௌதம் மேனன் ஆகிய இருவரும் தற்போது இரண்டாம் பாகத்துக்கான ஸ்கிரிப்ட் பணிகளில் இருப்பதாகவும் ஸ்கிரிப்ட் பணி முடிவடைந்தவுடன் வேல்ஸ் பிலிம்ஸ் உடனடியாக படப்பிடிப்பை தொடங்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும் என்று அவர் கூறியுள்ளார்.

இதனை அடுத்து 'வெந்து தணிந்தது காடு' படத்தின் இரண்டாம் பாகம் உறுதி செய்யப்பட்டு உள்ளதால் சிம்பு ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

# 'வாரிசு' பரபரப்பு



தளபதி விஜய் நடித்து வரும் 'வாரிசு' திரைப்படத்தை ஓடிடியில் ரிலீஸ் செய்யுங்கள் என்ற ஹேஷ்டேக் டுவிட்டரில் டிரெண்ட் ஆகியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விஜய் நடிப்பில், வம்சி இயக்கத்தில், தில் ராஜூ தயாரிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'வாரிசு'. வரும் பொங்கல் தினத்தில் இந்தத் திரைப்படம் தமிழ் தெலுங்கு மொழிகளில் திரையரங்குகளில் பிரமாண்டமாக வெளியாகவுள்ளது.

இந்த நிலையில் திடீரென 'வாரிசு' திரைப்படத்தை ஓடிடியில் வெளியிடுங்கள் என்பதை குறிப்பிடும் வகையில் #WeWantVarisuOnOTT என்ற ஹேஷ்டேக்கை நெட்டிசன்கள் டிரெண்டாகி வருகின்றனர்.

இது விஜய் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனை அடுத்து விஜய் ரசிகர்கள் அதிரடியாக #TheatreOwnersFavStarVijay என்ற ஹேஷ்டேக்கை பதிலுக்கு டிரெண்டாக்கி வருகின்றனர்.

சென்னை

# சா'தீ'யை விதைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது



"சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்றாலும், தமிழ்நாட்டில் ஆங்காங்கே தலைகாட்டிக் கொண்டுதான் இருக்கிறது. இது தற்போது தமிழ்நாட்டில் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதற்குக் காரணம் திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) அரசின் அலட்சியப் போக்கே என்று சொன்னால் அது மிகையாகாது" என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க, பிறப்பினால் மனிதர்கள் ஒரே மாதிரியானவர்கள். மனிதர்களில் உயர்வு, தாழ்வு கிடையாது. "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றார் ஔவை பிராட்டியார். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடினார் மகாகவி பாரதியார். இப்படி சாதிக்கு எதிராக போராடியவர்கள் வாழ்ந்த தமிழ் மண்ணில், தீண்டாமை சட்டப்படி ஒழிக்கப்பட்டும், ஆங்காங்கே தலைகாட்டுவது மிகவும் வருத்தம் அளிக்கும் செயலாகும்.

தி.மு.க., ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கரோனாத் தொற்று நோய் காரணமாக ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு சுழற்சி முறையில் சாதி அடிப்படையில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பாடம் எடுக்கப்பட்டது; ஒருசில பள்ளிகளில் வருகைப் பதிவேடு சாதி அடிப்படையில் பராமரிக்கப்பட்டது; சில பள்ளிகளில் கை மணிக்கட்டில் கயிறு கட்டப்பட்டது; இதன் காரணமாக ஒரு மாணவன் உயிரிழந்தது என பல சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடந்துள்ளன.

இந்த வரிசையில், தற்போது தென்காசி மாவட்டம், சங்கரன்கோயில் அருகே பாஞ்சாகுளத்தில் ஒரு சிறுவனுக்கு மிட்டாய் தர மறுத்த சம்பவம், தந்தை பெரியார் பிறந்த தினத்திலிருந்து கைபேசிகளில் வைரலாக பரவிக் கொண்டிருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றுமறியா பிஞ்சு உள்ளத்தில் சா'தீ'யை விதைப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இதை எண்ணும்போது மனித இனம் தலைகுனிய வேண்டும் என்றார்

பால்கர்

# காதலர்களை கரம்பிடிக்க ஓடிய சிறுமிகள் சிக்கினர்.

காதலர்களை கரம்பிடிக்க வீட்டை விட்டு ஓட்டம் பிடித்த இரண்டு சிறுமிகளையும் அவ்விருவருக்கும் துணையாக சென்ற மற்றுமொரு சிறுமியையும் பால்கர் பொலிஸார் குஜராத்தில் பத்திரமாக மீட்டனர்.

பால்கர் மாவட்டம் நாலாசோப்ரா பகுதியை சேர்ந்த 8 ஆம் வகுப்பு படிக்கும் 3 சிறுமிகள் கடந்த 14 ஆம் திகதி வீட்டில் இருந்து காணாமல் போயினர்.

பெற்றோர் எங்கு தேடியும் சிறுமிகளை கண்டுபிடிக்க முடியாததால் இதுகுறித்து பொலிஸில் புகார் அளித்தனர்

காணாமல் போன சிறுமிகளில் ஒருவர் குஜராத்தில் உள்ள சூரத்திலும், மற்ற இருவரும் அதே மாநிலத்தில் உள்ள வாபி பகுதியிலும் இருப்பது பொலிஸாருக்கு தெரியவந்தது. இதையடுத்து குஜராத் பொலிஸார் உதவியுடன் சிறுமிகள் 3 பேரையும் பால்கர் பொலிஸார் மீட்டனர்.

சிறுமிகளிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது, 2 சிறுமிகள் ராஜஸ்தானில் உள்ள தங்களின் காதலர்களுடன் சென்று சேரும் ஆசையில் வீட்டை விட்டு வெளியேறியதும், 3 ஆவது சிறுமி அவர்களுக்கு துணையாக சென்றதும் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து 2 சிறுமிகளை காப்பகத்தில் ஒப்படைத்த பொலிஸார். துணைக்கு சென்ற சிறுமியை மட்டும் அறிவுரை கூறி பெற்றோரிடம் அனுப்பி வைத்தனர்

மங்களூரு

## ஒக்ஸிஜன் பொருத்தப்பட்ட நோயாளியை

# 2,700 கி.மீ. அம்புலன்ஸில் அழைத்து சென்ற ஓட்டுநர்



உத்தர பிரதேச மாநிலம் மொரதாபாத்தைச் சேர்ந்த 29 வயதானவர், கர்நாடக மூடபித்ரி அருகிலுள்ள பாக்கு கிடங்கில் வேலை பார்த்து வருகிறார். கடந்த மாதம் 25 ஆம் திகதி இவர் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது உயரமான இடத்தில் இருந்து கீழே விழுந்ததில் படுகாயமடைந்தார்.

சிகிச்சைக்குப் பின்னர் அவரை சொந்த ஊருக்கு அழைத்துச் செல்ல, உறவினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். ஒக்ஸிஜன் பொருத்தப்பட்ட நோயாளியை ஏற்றிய அம்புலன்ஸ் சுமார் 2,700 கி.மீ. தூரத்தை 41 மணி நேரத்தில் பயணித்து சொந்த ஊரை அடைந்தது.

இதுகுறித்து அம்புலன்ஸ் உரிமையாளரும், ஓட்டுநருமான அனில் ரூபன் கூறும்போது, "செப்டம்பர் 9ம் திகதிதி மருத்துவமனையிலிருந்து நோயாளி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அவருக்காக முதலில் விமானத்தில் டிக்கெட் முன்பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஒக்ஸிஜன் உதவியுடன் பயணியை விமானத்தில் ஏற்ற தனியார் விமான சேவை நிறுவனம் மறுத்துவிட்டது.

இதையடுத்து அம்புலன்ஸில் பயணிக்க முடிவு செய்து என்னை அணுகினர். இது ஒரு சிக்கலான பணி என்றபோதிலும், நான் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு உ.பி.க்குச் சென்றேன். செப்டம்பர் 10ம் திகதி மாலை கிளம்பிய நாங்கள், செப்டம்பர் 12ம் திகதி காலை மொரதாபாத்தை அடைந்தோம்.பின்னர் அவரை அங்கு ஷிரேயா நியூரோ கேர் மருத்துவமனையில் சேர்த்தோம்" என்றார்.

நாகர்கோவில்

# 13.5 தொன் லொரியை இழுத்து வாலிபர் சாதனை

நாகர்கோவிலில் 13.5 தொன் நிறையைக் கொண்ட லொரியை 4 நிமிடத்தில் 111 மீட்டர் தூரம் இழுத்து குமரி வாலிபர் உலக சாதனை படைத்தார். நாகர்கோவில் அருகே உள்ள தாமரைகுட்டிவிளை பகுதியை சேர்ந்தவர் கண்ணன். விளையாட்டு வீரரான இவர் ஏற்கெனவே பல்வேறு எடை பிரிவு போட்டிகளில் பங்கேற்று கனரக வாகனங்களை தனது உடலால் இழுத்து சாதனை படைத்துள்ளார்.

இந்த நிலையில்



நாகர்கோவில் அருகே விஸ்வாசபுரம் நான்கு வழிச்சாலையில் 13,500 கிலோ கிராம் எடையுள்ள 14 டயர் லாரியை கயிற்றால் கட்டி இழுத்து சாதனை படைத்தார். 4 நிமிடங்களில் 111 மீட்டர் தூரம் இழுத்து கண்ணன் இந்த சாதனையை படைத்திருக்கிறார். அவருக்கு சோழன் உலக சாதனை புத்தக அறக்கட்டளை நிறுவனர் நிமிலன் நீலமேகம் சான்றிதழ் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.



இன்று ஆரம்பிக்கிறது இ–20 தொடர்:

# அவுஸ்திரேலியாவா, இந்தியாவா?

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு T-20 சர்வதேசப் போட்டித் தொடரானது, மொஹாலியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள உலகக் கிண்ணத்துக்கு முன்பாக சிறந்த தயார்ப்படுத்தலாக இத்தொடர் காணப்படுகின்ற நிலையில், இரண்டு அணிகளும் தமது இறுதிப் 11 வீரர்களை அடையாளங்கண்டுகொள்ள உதவும் தொடராக இத்தொடர் நோக்கப்படுகிறது.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் லோகேஷ் ராகுலிடமிருந்து சிறப்பான பெறுபேறுகள் வர வேண்டிய அழுத்தம் காணப்படுகின்றது. தவிர, ஹர்டிக் பாண்டியாவும் பந்துவீச்சில் மிகவும் மேம்பட வேண்டியுள்ளதுடன், ரிஷப் பண்டிடமிருந்தும் மிகவும் மேம்பட்ட பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக அவுஸ்திரேலிய அணியில் தன்னை இடம்பெறச் செய்து கொள்வதற்கான மிகச் சிறந்த வாய்ப்பாக டிம் டேவிட்டுக்கு இத்தொடர் காணப்படுகின்றது. தவிர, ஸ்டீவ் ஸ்மித்தும் தனதிடத்தை அணியில் நிரூப்பிக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளார்.



புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் வித்தியாலயத்தின் பொன்விழா:

## சம்பியனான சி. ஆர் 7

■ எம்.யூ.எம். சனூண்

புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் வித்தியாலயத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக பழைய மாணவர் அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு எழுவர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரில் சி. ஆர் 7 சம்பியனானது.

கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற 20 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்றற இறுதிப் போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி அணியை வென்றே சி. ஆர் 7 அணி சம்பியனானது.

சம்பியனான சி. ஆர் 7 அணிக்கு வெற்றிக் கிண்ணமும், 30,000 ரூபாய் பணப் பரிசும், இரண்டாமிடத்தைப் பெற்ற சிற்றி அணிக்கு கிண்ணமும் 15,000 ரூபாய் பணப் பரிசும் அதிதிகளால் வழங்கப்பட்டன.

போட்டி நிகழ்வுகளின் மூலம் பெறப்பட்ட சுமார் 80,000 ரூபாய் நிதி பழைய மாணவர் அமைப்புக்களால் பாடசாலை அபிவிருத்திக்காக அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

சேர் ஜோன் றொபேர்ட் மெய்வல்லுநர் போட்டியில்

## 2 பதக்கங்களைப் பெற்ற ஜெனுஸ்கர்

■ சு. சுரேந்திரன்



கொழும்பு தியகம விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் சேர் ஜோன் றொபேர்ட் மெய்வல்லுநர் போட்டியில், பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையின் வை. ஜெனுஸ்கர் 1,500 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் 3,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று பாடசாலைக்கும், பதுளை மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது.

இம்மாணவனை போட்டிக்கு பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளருக்கும், பாடசாலையின் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர எம்.எச். எஃப். ரிசானுக்கும், மாணவனின் பெற்றோருக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

# இணைந்த கரங்களால் பாதணிகள் வழங்கி வைப்பு

■ சகா

அம்பாறை மாவட்டம் அட்டப்பளம் பகுதியை சேர்ந்த ஜொலி ஸ்டார் விளையாட்டு கழகத்தினருக்கு ஒரு தொகுதி பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இணைந்த கரங்கள் அமைப்பின் அனுசரனையின் ஊடாக ஜொலி ஸ்டார் கழக உறுப்பினர்களுக்கு பெறுமதி வாய்ந்த பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ருங்காபி சிட்னியில் முத்துக்கறி உணவக உரிமையாளர். சமூக சேவையாளர் லக்சனின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன. இதன் போது இணைந்த கரங்களின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், சங்கீத்,தஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் உரையாற்றிய இணைப்பாளர் லோ. கஜரூபன், “எதிர்காலத்தில் விளையாட்டுக்கள் ஊடாக இனங்களுக்கிடையிலான பிணைப்புகள் வளர வேண்டும். பக்குவம் நம்பிக்கை என்பன கட்டியெழுப்பப்படுவதன் ஊடாக போதையற்ற உலகை விளையாட்டு வீரர்களால் உருவாக்க முடியும்” எனக் குறிப்பிட்டார்.

ஈரான்

# ஹிஜாப்பை கழற்றி எறிந்து பெண்கள் போராட்டம்

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை என கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண்ணொருவர் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்ததோடு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்காக பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக அப்பெண்ணின் சொந்த ஊரான சஹிஸ் நகரில் நேற்று முன்தினம் திரண்ட நூற்றுக்கணக்கான பெண்கள் தாங்கள் அணிந்திருந்த ஹிஜாப்பை கழற்றி எறிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மேலும், ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசிக்கு எதிராக ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் ‘சர்வாதிகாரிக்கு மரணம்’ என்ற கோஷத்தையும் எழுப்பினர். பல பகுதிகளில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2 ஆண்டுகளுக்கு பின்னர் களை கட்டியது

## பீர் திருவிழா

ஜேர்மனியில் மிகப்பெரிய நாட்டுப்புற விழாவான ஒக்டோபர்ஃபெஸ்ட் என அழைக்கப்படும் ‘பீர் அருந்தும்‘ திருவிழாவானது கடந்த இரண்டு வருடங்களாக கொரோனாத் தொற்றுக் காரணமாக நடைபெறாமல் இருந்தது.

இந்நிலையில் இம்முறை பவேரியா மாகாணத்தில் உள்ள முனிச் நகரத்தில் இத் திருவிழாத் கொண்டாட்டம் கோலாகலமாக அரம்பித்துள்ளது.

34.5 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட இந்த திருவிழாவிற்கு உலகம் முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான பார்வையாளர்கள் வருகை தருவார்கள் எனக் கூறப்படுகின்றது.

3 நாட்கள் வரை நீடிக்கும் இத் திருவிழாவிற்கு பெருபாலான ஆண்கள் தோல் ஷார்ட்ஸ் (Leather ஷார்ட்ஸ்) உடைகளிலும் மற்றும் பெண்கள் dirndl எனப்படும் பாரம்பரிய ஆடை அணிந்து வருவார்கள்.

மேலும் இத்திருவிழாவின் போது மக்கள் அனைத்து வகையான பீர்களையும் சுவைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அமெரிக்கா

# முடிவுக்கு வந்தது கொரோனா – ஜோ பைடன்

அமெரிக்காவில் கொரோனா தொற்று முடிவுக்கு வந்ததாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.



உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவலானது வரலாறு காணாத தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

எனினும் கொரோனா தடுப்பூசி உள்ளிட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக உலக நாடுகள் தற்போது படிப்படையாக கொரோனா தொற்றில் இருந்து மீண்டு வருகின்றன.

இந்நிலையில் செய்தியாளர்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ”அமெரிக்காவில் கொரோனா தொற்று முடிவுக்கு வந்துள்ளது. கொரோனாவால் சில பிரச்சனை உள்ளது. அதனை ஒழிக்க தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். ஆனால் தொற்றுநோய் முடிந்துவிட்டது.

நீங்கள் கவனித்தால், இங்கு யாரும் முகக் கவசம் அணியவில்லை. கடந்த வாரம், கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை மார்ச் 2020 க்குப் பிறகு வெகுவாக குறைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எல்லோரும் நல்ல நிலையில் இருப்பது போல் தெரிகின்றது. அதற்கு இது ஒரு சிறந்த உதாரணம் என்று நான் நினைக்கிறேன்” என்றார்.




விர்ஜினியா

# விமானத்தை கயிறு கட்டி இழுக்கும் மக்கள்

விர்ஜினியாவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்காக நிதி திரட்டும் வகையில் விநோத போட்டியொன்று நடைபெற்று வருகின்றது.

சுமார் 82,000 கிலோகிராம் எடை விமானத்தில் கயிறை கட்டி இழுப்பதே இப் போட்டியாகும்.

இந்நிலையில் இப்போட்டியில் மாற்றுத்திறனாளிகள் உட்பட ஏராளமான மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரான்ஸ்

## 60 ஆவது வயதில் ஸ்பைடர் மேனாக மாறிய நபர்

பிரான்ஸ் சேர்ந்த 60 வயதான நபர் ஒருவர் எவ்வித பாதுகாப்பு உபகரணமும் இல்லாமல் மிக உயரமான கட்டிடத்தில் ஏறி பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

பிரான்ஸைச் சேர்ந்த அலாய்ன் ராபர்ட் என்ற நபரே இவ்வாறு பல உயரமான கட்டிடங்களில் ஏறி முக்கிய பிரச்சனைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்.

இதன் காரணமாக இவர் மக்களால் பிரான்ஸ் ஸ்பைடர் மேன் என்று அழைக்கப்படுகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம்( 17) தனது அறுபதாவது பிறந்தநாளை கொண்டாடிய இவர் பிரான்ஸ் தலைநகரான பரீஸில் உள்ள 613 அடி உயர வணிக வளாக கட்டடத்தில் எவ்வித பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் ஏறி சாதனை படைத்துள்ளார்.

மேலும் சாதனைக்கு வயது ஒரு தடையில்லை என கூறி இளைஞர்களை ஊக்குவித்து வருகின்றார். .

இவர் கடந்த 1977 ஆண்டு முதல் கட்டடங்கள் மீது தனி ஒரு நபராக ஏறி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாய்வான்

# நிலநடுக்கத்தால் தடம் புரண்ட ரயில்கள்

தாய்வானில் நேற்று முன்தினம் (18) உள்ளூர் நேரப்படி நண்பகல் 12.14 மணியளவில் டைடுங் நகரில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6.8 ஆகப் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தலைநகர் தைபே உட்பட நாட்டின் பல நகரங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் குலுங்கியதாகவும்,இதனால் பீதியடைந்த மக்கள் அலறியடித்தப்படி கட்டடங்களை விட்டு வெளியேறி வீதிகளிலும், திறந்தவெளி மைதானங்களிலும் தஞ்சம் புகுந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதே சமயம் சிஸ்ஹேங் மற்றும் யாலி நகரங்களுக்கு இடையில் உள்ள பூலி என்கிற நகரில் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 20 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.